

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், நடிகர் பொன்வண்ணன் – நடிகை திருமதி சரண்யா தம்பதியினர் சந்தித்து தங்களது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.12.2025) நாடகப்பிரியா நாடகக் குழுவின் தலைவரும் நடிகருமான எஸ்.வி. சேகர் அவர்களின் 75வது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் மற்றும் எஸ்.வி. சேகர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் எஸ். அமிர்தராஜ் குடும்பத்தினருடன் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு ஆகியோர் உள்ளனர்.

### கடலூர் மேற்கு மாவட்டத்தில் 4 சட்டமன்றத் தொகுதிகளில்

# கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் வேண்டுகோள்!

கடலூர், டிச. 27–

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தா சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்ட மன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர் பட்டியலை ஒன்றிய,நகர, பேரூர் வாரியாக பிரித்து வழங்க உள்ளோம்.

வரைவு வாக்காளர் பட்டியலை பெற்றுக் கொண்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உடனடியாக பாகம் வாரியாக பிரித்து வார்டு கிளைச் செயலாளர்கள் மூலம் அந்தந்த பாக BLA2 வசம் ஒப்படைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பூத் வாரியாக பிரித்து தரப்படும் வரைவு வாக்காளர் பட்டியலுடன், இறந்த , இடம் மாறிய கண்டுபிடிக்க முடியாத வாக்காளர்களின் விவரங்கள் அடங்கிய ASD பட்டியலையும் சேர்த்து எடுத்துக்கொண்டு அந்த பூத் BLA 2+BDA + BLC மற்றும் கழகத்தினருடன் வீடு வீடாகச் சென்று வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்த்திடும் இன்றியமையாப் பணியில் உடனே ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

சரிபார்த்து வரைவு வாக்காளர் பட்டியலில் விடுப்பட்ட வாக்காளர்களையும், 18வயது நிரம்பிய புதிய வாக்காளர் பெயர்களையும். புதிதாக இடம் பெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் படிவம் 6ல் சேர்த்திடும் முக்கியப் பணியில் கழகத்தினர் அனைவரும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.



பூத் வாரியாக ASD பட்டியலை சரிபார்க்கும் போது உண்மையாக உள்ள வாக்காளர்கள் பெயர் படிவம் 5 நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அவர்களது பெயர் மீண்டும் அந்த பூத் வாக்காளர் பட்டியலில் சேர்த்திட சிறப்பு படிவம் 6ல் பூர்த்தி செய்து தருவதற்கு உரிய உதவிகளை செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் போது இறந்தவர்கள் இடம் மாறியவர்கள் பெயர்கள் மீண்டும் இடம் பெற்றிருந்தால், அந்தந்த பூத் BLA2 படிவம் 7ல் பூர்த்தி செய்து அவர்களை நீக்கம் செய்திடும் பணியில் ஈடுபட வேண்டும்.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களில் 2002/2005 SIR சரிபார்ப்பில் Match ஆகாதவர்களுக்கு அந்தந்த தொகுதி தேர்தல் அலுவலர்கள், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 12 ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை வழங்கிட வேண்டும் என்று BLO மூலம் நோட்டீஸ் வழங்கினால் அந்தந்த BLA2 அது சம்பந்தமாக அந்த வாக்காளர்களிடம் இருந்து ஆவணங்களை பெற்று BLO வசம் ஒப்படைத்திடும் பணியில் ஈடுபட்டு அவர்களை வாக்காளர்களாக சேர்ப்பதற்கு உதவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள். BLA2BIC BDAவழக்கறிஞர் அணி மற்றும் கழகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து இருகரம் கோர்த்து, இந்த இன்றியமையாத பணியை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று அனைவரையும் இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கிறேன்.

வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இந்த வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி முக்கியமானது என்பதை கழகத்தினர் அனைவரும் கவனத்தில்கொண்டு ஒற்றுமையாக இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சி.வி. கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கு.தியாகராஜன் தலைமையில்

# தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்!

சென்னை, டி.27-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் தலைமையில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது.

கூட்டத்தில் மாநிலச் செயலாளர் அருள்குமார் முன்னிலை வகிக்க, மாநிலப் பொருளாளர் உதயகுமார் வரவேற்புரை ஆற்றினார். மாநில ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நன்றியுரை யாற்றினார்.

கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக அரசு கடுமையான நிதி நெருக்கடியிலும், கடன் சுமையிலும் இருந்தபோதிலும், ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களின் வாழ்வாதாரக் கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவது குறித்து முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் சிந்தித்து வருவதாகவும், அனைவரும் ஏற்கும் வகையில் ஓய்வூதியம் குறித்த நல்ல செய்தியை முதலமைச்சர் அவர்கள் தைப்பொங்கலுக்குள்ளாக அறிவிப்பார் என அமைச்சர்கள் தெரிவித்தனர்.

மேலும், 6.5 லட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் 21 ஆண்டுகால ஏக்கத்தைப் போக்கும் வகையில், “2026 புத்தாண்டு தொடங்கும் போது ஓய்வூதியம் குறித்த ஒரு நல்ல செய்தியை முதலமைச்சர் அறிவிப்பார்” என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

பேச்சு வார்த்தை நடத்திய அமைச்சர்கள் குழுவினருக்கும், ஊடக சந்திப்பில் அதனை உறுதிப்படுத்திய அமைச்சர் அவர்களுக்கும் இம்மாநில நிர்வாகிகள் கூட்டம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தான் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் அடிப்படை வாழ்வாதாரக் கோரிக்கைகள் உட்பட அனைத்தும் வென்றெடுக்கப்பட்டுள்ளன என்பதை இம்மாநில நிர்வாகிகள் கூட்டம் பெருமையுடன் நினைவு கூர்ந்தது.

53,000 தொகுப்பூதிய ஆசிரியர்களை ஒரே கையெழுத்தில் காலமுறை ஊதியத்திற்கு மாற்றியது கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு.

2006 ஊதியக்குழு மாற்றத்தின் போது, விதிகளில் இடமில்லை என உயர் அலுவலர்களும், பிற சங்கங்களும் கைவிட்ட நிலையில், அப்போதைய துணை முதலமைச்சர் (இன்றைய முதலமைச்சர்) அவர்கள் எடுத்த உறுதியான முடிவால் 1.1.2006 முதல் 31.5.2009 வரை நியமிக்கப்பட்ட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஊதிய உயர்வு பலன்களைப் பெற்றனர்.

கடந்த அ.தி..மு.க. ஆட்சியில் அரசு ஊழியர் ஆசிரியர் சங்கங்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அடிக்கடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதில்லை, ஒரே முறை பேச்சு வார்த்தையில் ஈடுபட்டாலும் அதில் எவ்வித கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டதில்லை,

இந்த அரசு அமைந்தவுடன் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகள் குறித்து, பலமுறை தற்போது அமைக்கப்பட்ட இதே அமைச்சர்கள் குழு பேச்சுவார்த்தை நடத்தி,முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பறிக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வை மொத்தமாக தொகுத்து ஒரே தவணையில் வழங்கியதும், சரண்டர் விடுப்பு ஒப்படைப்பு உள்ளிட்ட பறிக்கப்பட்ட சலுகைகளை நிதிப்பலன்களை மீண்டும் வழங்கியதுடன், கடந்த ஆட்சியில் ஒருங்கிணைக்கப்பட்ட பள்ளிக்கல்வி மற்றும் தொடக்கக் கல்வித் துறைகளைத் தனித்தனி அலகுகளாக பிரித்து நிர்வாகத்தைச் சீரமைத்திட காரணமாக இருந்தது,

அனைத்து ஆசிரியர்களும் பெரும்பான்மையாக விரும்பாத ஆணையர் பணியிடத்தை ஒழித்து, விரும்பிய இயக்குனர் பணியிடத்தை கொண்டு வர காரணமாக இருந்தது தற்போதைய இந்த மூன்று அமைச்சர்கள் அடங்கிய பேச்சுவார்த்தை குழுவும் அதனை ஏற்று நடவடிக்கை மேற்கொண்டது முதலமைச்சர் அவர்கள் என்பதையும் நினைவு கூர்ந்து,

மீண்டும் ஓய்வூதியத் திட்டத்தை யும் இவர்களே சாத்தியமாக்குவார்கள் என நம்புகிறோம்.

ஜாக்டோ ஜியோ அமைப்பினை மறுக்கட்டமைப்பு செய்ததில் நமது இயக்கத்தின் பங்கும் அளப்பரியது. ஜாக்டோ ஜியோ முன்னெடுக்கும் ஒவ்வொரு போராட்டத்திலும் நாம் வீரியத்தோடு பங்கெடுத்திருக்கிறோம். அதனடிப்படையில் தொடர்ந்து ஜாக்டோஜியோவின் அனைத்து முன்னெடுப்புகளிலும் நாம் முன்னணியில் இருப்போம் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் இக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

CPS திட்டத்தை ரத்து செய்து ஓய்வூதியத் திட்டம் குறித்த அறிவிப்பினை முதலமைச்சர் அவர்கள் விரைவில் அறிவிப்பார் என்ற நம்பிக்கையோடு பயணிக்கும் சூழலில் இந்தக் கோரிக்கை நிறைவேறக் கூடாது எனச் சூழ்ச்சி செய்யும் சில சுயநல சக்திகளின் எண்ணங்களை முறியடித்து, 6.5 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஏற்கனவே ஓய்வு பெற்ற, இயற்கையெய்தி நிர்க்கதியாக இருக்கும், அவர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் அதற்கான வாய்ப்புகள் இன்னும் சில நாட்களே இருக்கிறது என்பதை கருத்திற்கொண்டு, முதல்வர் அவர்களுடன் நமக்குள்ள இணக்கமான சூழலை பயன்படுத்தி, சரியான திட்டமிடலுடன் ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று மாநிலத் தலைவர் கு. தியாகராஜன் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் மாநில அமைப்புச் செயலாளர் ரமேஷ், மகளிர் அணிச் செயலாளர் வந்தனா, மாநில துணைச் செயலாளர் முருகன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# சுற்றுலாத் தலமாக மாறிய பொருநை!

**‘சத்தியம்’ தொலைக்காட்சியில் திருநெல்வேலியில் முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பொருநை அருங்காட்சியகம் குறித்து வெளியிட்டுள்ள சிறப்பு ஒளிபரப்பு வருமாறு:**

திருநெல்வேலியில் அமைந்துள்ள பொருநை அருங்காட்சியகம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அண்டை மாநிலமான கேரளாவில் இருந்தும் சுற்றுலா பயணிகளை பெரிதும் ஈர்த்துள்ளது. ஆர்வத்துடன் பொதுமக்கள் கண்டு ரசித்து வருகின்றனர். நவீன தொழில் நுட்ப உதவியுடன் தமிழரின் வீரம், நாகரீகம் காட்சிப் படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து தங்களின் கருத்துகளை சுற்றுலாப் பயணிகள் பகிர்ந்து கொண்டனர்.

**நடுத்தர வயது பெண் -1 :-** நான் திருநெல்வேலியில் இருந்து வருகிறேன். இங்கே நம்முடைய ஐந்திணைகளைப் பற்றி மிகவும் பெருமையாக சொல்லி இருக்கிறார்கள். எல்லாமே ரொம்ப நல்லா இருக்கிறது. இப்போது உள்ள தலைமுறையினருக்கு இது பற்றி அந்த அளவிற்குத் தெரியுமா என்று தெரியவில்லை. அந்த அளவிற்கு 3டி, 5டி, சவுண்ட் எப்பெக்ட் எல்லாம் போட்டு அனைத்தையும்

**பெண்:** கண்டிப்பாக அந்தப் பெருமை தமிழர்களையே சாரும். அதுக்கு முன்பு நிறைய பேருக்கு தெரிந்து இருக்க வாய்ப்பு கிடையாது. அது மட்டுமல்ல ஐந்திணைகளும் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறது என்று சொல்லும் போது அதுவும் ரொம்ப பெருமையான விஷயம். இன்னொன்று இரும்பு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் நாம் தான் கண்டுபிடித்து இருக்கிறோம். இரும்பு எப்படி தயாரிக்க வேண்டும் என்பது முதற்கொண்டு அந்த 3 டி, 5டி எப்பெக்டில் சொல்லும் போது இப்போது இருக்கின்ற ஜெனரேஷனுக்கும் இது பெருமை. நமக்கும் இது பெருமை.

**செய்தியாளர்:** இந்த ஏற்பாடுகள் எப்படி இருக்கு?

**பெண்:** ரொம்ப நல்ல முயற்சி, நல்ல ஏற்பாடு, இது மாதிரி இன்னும் பெருக வேண்டும் என்று நான் ஆசைபடுகிறேன்.

**முதிய பெண்:** படகை பார்த்ததும் தண்ணீரிலே நாங்கள் போன மாதிரி உணர்ந்தோம். சூப்பராக இருந்தது.

**செய்தியாளர்:** பொருநையை பார்த்தது எப்படி இருந்தது?

**முதிய பெண்:** பழங்காலத்தில் இருந்தவர்களின் பெருமையை அறிந்து கொள்ளும் வகையில் இது சூப்பராக இருந்தது. எல்லாம் குடும்பத்தில் உள்ள அனைவரையும் கண்டிப்பாக கூட்டிட்டு வந்து இதை பார்க்க வேண்டும். படகில் போவதற்காகவே அனைவரையும் கூப்பிட்டு வரவேண்டும். நல்லா இருந்தது. என்னுடைய பெயர் யசோதா.




நல்ல விதமாக சிறார்களுக்கும் புரிகிற மாதிரி, நம்முடைய ஜெனரேசனுக்கும் புரிகிற மாதிரியும் சரி நல்லா சொல்லி இருக்கிறார்கள்.

**செய்தியாளர்:** இரும்புக் காலம், ஐந்தாயிரத்திற்கு முன்பே முதன் முதலாக தமிழர்கள் தான் இரும்பைக் கண்டு பிடித்துள்ளார்கள் என்பதைப் பற்றி?

**நடுத்தர வயது பெண்-2:-** இந்த கண்காட்சியினை எல்லோருமே வந்து பார்க்க வேண்டும். இப்போது இருக்கின்ற பள்ளி, கல்லூரி மாணவர்களாக இருக்கட்டும், குடும்பத்தினராக இருக்கட்டும் அவர்களுக்கும் நமது தமிழ்நாட்டின் பெருமை பற்றி தெரிந்து இருக்க வேண்டும். அனைவரும் வந்து பார்க்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்.

ஏதேதோ சிலர் இன்றைக்கு பேசுகிறார்கள். ஆனால் நம்முடைய சரித்திர காலங்கள் எப்படி இருந்திருக்கிறது. குறிப்பாக கி.மு.க்கு முன்னாடி, 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டின் பாரம்பரியம், நாகரிகம் எப்படி இருந்தது என்பதை தெளிவா ஆதாரங்களோடு உண்மையிலேயே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ரொம்ப, ரொம்ப எக்சலைண்டாக இருக்கிறது. மனிதர்கள் உயிரோடு வாழ்வதற்கு எவ்வளவு விஷயங்கள் இருந்திருக்கிறது. நம்மை யாரெல்லாம் ஆட்சி செய்தார்கள் என்பதை எல்லாம் சிறப்பாகக் காட்டியிருக்கிறார்கள். இதற்காக சிரத்தை எடுத்ததற்காக மனப்பூர்வமான பாராட்டுக்கள்,




**கேரளப் பெண்**

கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆதிரா என்ற பெண், மலையாளத்திலே “பொருநை மிக சிறப்பாக அமைந்திருக்கிறது என்று பெருமை பொங்க குறிப்பிட்டார். எல்லாமே சிறப்பாக அமைத்திருக்கிறார்கள் நன் எனது தோழிகளுடன் வந்து பார்த்தேன், சிறப்பாக அமைத்திருக்கிறது. நான் இதைக் கண்டு களித்தேன். இங்கு அமைந்துள்ளது அனைத்தும் நன்றாக அமைந்திருக்கின்றது”.

**நடுத்தர வயது கேரள ஆண்:** இந்த இடத்திற்கு வந்து பார்த்ததில் மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஏனென்றால் நாம் வாழ்ந்த வாழ்க்கை சரித்திரத்தை கொஞ்சம் புரட்டி பார்க்கும் போது ரொம்ப எக்ஸலைண்டாக இருந்தது. தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் எவ்வளவு சிரமப்பட்டு இருக்கிறார்கள். இதனை எடுப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டு இருக்கிறார்கள். எவ்வளவு கடின உழைப்பை இன்றைக்கு எடுத்து இருக்கிறார்கள்.

“இதனை இன்றைக்கு இருக்கின்ற பிள்ளைகள் பள்ளிகளில் படிக்கின்ற இளம் பிள்ளைகள் இந்த அறிவியல் ஆராய்ச்சியை கூர்ந்து உற்று நோக்கி ஒரு நேரம் எடுத்து பொறுமையாக பார்க்கும் போது உண்மையிலேயே ரொம்ப பிரயோசனமாக இருக்கும். நாம் ஏன் வாழ்கிறோம், நம்முடைய வாழ்க்கை முறை எப்படி இருந்தது என்று இதனை பார்த்து கண்டு கொள்ள முடியும். இந்த ஏற்பாடு செய்ததற்காக ரொம்ப ரொம்ப என்னுடைய நன்றியை நான் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய பெயர் ஜான் சாமுவேல் நான் வயநாட்டில் இருந்து இந்த பொருநை காட்சியை பார்க்க வந்திருக்கிறேன்” என்றார்.

இவ்வாறு சத்தியம் தொலைக்காட்சி சிறப்புச் செய்தியை ஒளிபரப்பியுள்ளது.